# UNIVERSAL HIGHER EDUCATION TRUST

(A Registered Charitable Trust - No:982/2012)

HELPING HAND FOR THE NEEDY

## UHET's "HEARTS"

### (Higher Education for All to Realize Transformation of the Society) திட்டம்

மேல்நிலைப் பள்ளிக்கல்வியை முடித்த அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பயில வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற சமூக நோக்கத்துடன், 2012-ஆம் ஆண்டு "**அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை**" தொடங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது.

இந்த கல்வி ஆண்டும் (2023-24) எங்களது அறக்கட்டளை ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜவ்வாதுமலை ஒன்றியத்திற்குட்பட்ட அரசு, அரசு உதவிப்பெறும் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் 2023-ஆம் ஆண்டு +2 தேர்ச்சிபெற்ற தகுதியுடைய மாணவ / மாணவிகள் உயர்கல்வி பயில அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை-யின் "HEARTS" திட்டத்தின் மூலம் உயர்கல்வி உதவித்தொகை பெற விண்ணப்ப படிவம் **22.05.2023** முதல் **30.05.2023** வரை (சனி மற்றும் ஞாயிறு நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஏழு வேலை நாட்களில், மாணவர்கள் தங்களுக்கு அருகாமையிலுள்ள கீழ்க்காணும் ஏதேனும் ஓர் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **மாணவ / மாணவிகள் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் (+2 Provisional Mark Sheet) நகல் கொண்டு வரவும்.**

| வரிசை எண் | விண்ணப்பம் கிடைக்கும் இடங்கள் |
|---|---|
| 1 | அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை<br>அறை எண்: 215, டாக்டர், எம்.ஜி.ஆர். பிளாக், விஐடி வளாகம், வேலூர் |
| 2 | நகராட்சி அலுவலகம், குடியாத்தம் |
| 3 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அணைக்கட்டு |
| 4 | இந்து மேல்நிலைப்பள்ளி, ஆம்பூர் |
| 5 | இஸ்லாமியா ஆண்கள் கல்லூரி, ஆலங்காயம் ரோடு, வாணியம்பாடி |
| 6 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பத்தூர் |
| 7 | ஸ்ரீ இராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஆற்காடு |
| 8 | ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி திருமண மண்டபம், சோளிங்கர் |
| 9 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அரக்கோணம் |
| 10 | விஐடி கிராம வள மையம், வனத்துறை மேல்நிலைப்பள்ளி, ஜவ்வாதுமலை |

215, Dr. M.G.R. Block, VIT Campus, Vellore - 632 014, Tamil Nadu, India. Tel. : +91 416 224 7777, 220 2196
Fax : +91 416 2243092 E-Mail : pd.uhet@gmail.com Web : www.uhetindia.org

# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

**...வர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி**

## கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



ஒரு நாட்டின் முன்னேற்றம் மற்றும் மக்கள் நலனைத் தீர்மானிப்பதில், அந்த நாட்டில் உள்ள உயர்கல்வி பயின்றவர்களின் எண்ணிக்கை முக்கிய காரணியாக உள்ளது. தமிழ்நாட்டில் வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைத்து ஏழை மாணவர்களும் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயில உதவி செய்ய வேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அனைவர்க்கும் **உயர்கல்வி அறக்கட்டளை** கடந்த 10 ஆண்டுகளாக வெற்றிகரமாகத் தொண்டாற்றி வருகிறது. இத்திட்டத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் அறக்கட்டளை உறுப்பினர்கள் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், நிதிக்குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், விஐடி பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 2012 ஆம் ஆண்டுமுதல் இதுவரை 6,824 மாணவர்களுக்கு 7 கோடியே 76 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. கல்வி உதவித்தொகை பெற்றவர்களில் 3-இல் 2 பங்கு பெண்கள், 68% முதல்தலைமுறை பட்டதாரி மாணவர்கள், 91% அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆவர். உலகில் வளரும் நாடுகளெல்லாம் வளர்ந்த நாடுகளாக மாறுவதற்கு முக்கிய காரணம் கல்வி. அனைவரும் உயர்கல்வி பெறுவதை, குறிப்பாக பெண்கள் உயர்கல்வி பெறுவதை ஊக்குவிக்க வேண்டும். இதனால் குழந்தைத் திருமணங்களும், வளர்இளம்பெண்கள் குழந்தை பெறுவதும் வெகுவாகக் குறையும். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை போன்று தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களும் ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில உதவி செய்யத் தொடங்கிவிட்டால் தமிழ்நாடு உயர்கல்வியில் இந்தியாவில் முன்மாதிரி மாநிலமாக விளங்கும்.

## புலவர் வே. பதுமனார், அறக்கட்டளை உறுப்பினர்



கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - என்பது வான்புகழ் வள்ளுவனார் வனைந்த வாழ்வியல் செல்வம். செல்வது எதுவோ அதுவே செல்வம். ஆனால், கல்விச்செல்வம் ஒன்றுதான் கற்றவர்களைவிட்டு விலகாத செல்வம். அதனால்தான், அது கேடு இல்லாத செல்வமாய் உயிரோடு நிலைத்திருக்கும். இன்றைய அறிவியல் உலகில் உயர்கல்வியே பயனும் நலமும் நல்கும் என்பதை உணர்ந்துகொண்ட விஐடி வேந்தர் கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்களின் நெஞ்சத்தில் பூத்த திட்டமே அனைவர்க்கும் உயர்கல்வித் திட்டம். பொருளாதாரச் சிக்கலால் உயர்கல்வியைப் பெற இயலாத மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கும் இந்தத் திட்டத்தால், இதுவரை 6,824 மாணவர் பயன் பெற்றுள்ளார்கள். இந்தப் பயன் நாடு முழுவதும் செயலாக்கம் பெறுமானால், இந்தியத் திருநாடு உலக நாடுகளுக்கே தலைமை ஏற்கும்.

## திருமதி. மயிலாம்பிகை குமரகுரு, அறக்கட்டளை உறுப்பினர்



ஏழை மாணவர் அனைவரும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமையில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. வள்ளுவரின் குறள்படி கல்வி ஒரு பிறவியில் கற்றால் அக்கல்வி ஏழு பிறவிக்கும் தொடர்ந்து உதவும் என்பது நாமெல்லாம் உணர்ந்த ஒரு கருத்து. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, கல்விதான் சிறந்தது, உயர்ந்தது, உலகில் பெரியது, கல்விதான் மனிதனின் உயிர்நாடிஆகுமென்பது நாம் அறிந்ததே. ஏழை மாணவர்க்கு உயர்கல்வி தருவோம், நாளைய சமுதாயத்தை வளமான சமுதாயமாக உருவாக்குவோம்.

## அறக்கட்டளை உறுப்பினர்கள்



## "HEARTS" (Higher Education for All to Realize Transformation of the Society) திட்டம்

இத்திட்டத்தால் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் +2 முடித்த [illegible] மாணவர் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் [illegible] பாடப்பிரிவுகளில் தங்குதடையின்றிப் படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. [illegible] மாணவர்களுக்கு 7 கோடியே 76 இலட்சம் ரூபாய் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உதவித்தொகை வழங்குதல்





(2020 - 21) கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி கடந்த 31.03.2022 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள அண்ணா அரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் விஐடி வேந்தரும் அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரியின் இயக்குநர் டாக்டர். ஜெ.வி. பீட்டர் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவில் 533 மாணவ, மாணவியர்களுக்கு 29 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

## ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் கல்வி உதவித்தொகை பெற்று உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் கிராமப்புற மற்றும் முதல்தலைமுறைப் பட்டதாரி மாணவர் என்பதால் அவர்களுக்கு உடல்நலம், ஆளுமைத்திறன் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான தன்னம்பிக்கைப் பயிற்சிகளை வழங்கி வருகிறது. அறக்கட்டளை இந்த ஆண்டு 2022 ஜனவரிமுதல் ஜூன்வரை உள்ளிட்ட மாதங்களில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் ஆளுமை மற்றும் வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சிகளை அக்கல்லூரிகளோடு இணைந்து பயிற்சி அளித்தது.





குடியாத்தம் பகுதியில் உள்ள ஸ்ரீ அபிராமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 05.01.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு அக்கல்லூரியின் தலைவர் திரு. எம்.என். ஜோதிகுமார் அவர்கள் தலைமை வகித்தார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினர் புலவர் வே. பதுமனார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்துப் பேசினார். நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

TITLE : **Career Opportunities for Women Graduates**
RESOURCE PERSON : **Dr. S. VIDHYA,** Associate Professor, SENSE, VIT, Vellore
PARTICIPANT : **UG Final Year - 300 Students**





காட்பாடியில் உள்ள ஆக்ஸிலியம் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 22.03.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவியர்க்குத் தொழில் மற்றும் தொழில் சார்ந்த திறமையை வளர்த்துக்கொள்வது குறித்தும், ஆளுமை & வாழ்வியல் திறன்களை மேம்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.

TITLE : **Life Skills for the Young People**
RESOURCE PERSONS : **Mr. V.J. RAMESH,** Intuitive Coach, **Dr. FATIMA,** Life Coach
PARTICIPANT : **UG Final Year - 850 Students**



மாதனூரில் உள்ள புரட்சித்தலைவர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 07.04.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Career Opportunities for Graduates**
**RESOURCE PERSON : Dr. N. SHARMILA,** Assistant Director, Students Welfare, VIT, Vellore
**PARTICIPANT : UG Final Year - 150 Students**



வாணியம்பாடியில் உள்ள மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 13.04.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவியர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Career Opportunities for Graduates**
**RESOURCE PERSON : Dr. S. MEENAKSHI,** Assistant Professor, STARS Co-Ordinator, VIT, Vellore
**PARTICIPANT : UG Final Year - 500 Students**



காவேரிப்பாக்கம் பகுதியில் உள்ள காவேரிப்பாக்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 20.04.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினர் திரு. பாலாஜி லோகநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்துப் பேசினார். நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Life Skills for the Young People**
**RESOURCE PERSON : Dr. G.P. GANAPATHY,** Professor, CDMM, VIT, Vellore
**PARTICIPANT : UG Final Year - 150 Students**



வேலூரில் உள்ள டி.கே.எம். மகளிர் கல்லூரியின் சம வாய்ப்பு மையத்துடன் இணைந்து 21.04.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவியர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினர் டாக்டர். நர்மதா அசோக் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவியரை ஊக்குவித்துப் பேசினார். நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Career Development - Industry / Research Perspective**
**RESOURCE PERSON : Dr. J.N. SWATHI,** Associate Professor, VIT, Vellore
**PARTICIPANT : UG Final Year - 350 Students**



அரக்கோணம் பகுதியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 25.04.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை உறுப்பினர் திரு. கே.எம். தேவராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்துப் பேசினார். நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Career Development for Young People**
**RESOURCE PERSON : Dr. S. VIDHYA,** Associate Professor, SENSE, VIT, Vellore
**PARTICIPANT : UG Final Year - 300 Students**



வேலூரில் உள்ள முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 30.04.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Career Development for Young People**
RESOURCE PERSON : **Dr. R. SAKTHIVEL,** Associate Professor, SENSE, VIT, Vellore
PARTICIPANT : **UG Final Year - 100 Students**



ஏலகிரிமலைப் பகுதியில் உள்ள டான்பாஸ்கோ கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 09.05.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Career Development for Young People**
RESOURCE PERSON : **Dr. C. RAJASEKARAN,** Professor, SBST, VIT, Vellore
PARTICIPANT : **UG Final Year - 250 Students**



ஆம்பூரில் உள்ள மஜ்ஹருல் உலூம் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 18.05.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Interview Skills and Interview Etiquette for Freshers**
RESOURCE PERSON : **Dr. ANU BAISEL,** Asst. Director, Career Development Centre, VIT, Vellore
PARTICIPANT : **UG Final Year - 100 Students**



வாலாஜாவில் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக்கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையுடன் இணைந்து 19.05.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவியர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Life Skills for Young People**
RESOURCE PERSON : **Dr. N. DHANALAKSHMI,** Student Counsellor, VIT, Vellore
PARTICIPANT : **UG Final Year - 400 Students**



திருத்தணியில் உள்ள **GRT** பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் **(EEE, ECE & Bio Medical Engg. Dept.)**-துறைகளுடன் இணைந்து 03.06.2022 அன்று அக்கல்லூரியில் படிக்கும் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. திருத்தணி GRT கல்வி நிறுவனத்தின் புல முதன்மையர் டாக்டர் கே.எஸ். மீனாட்சிசுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்துப் பேசினார். நிகழ்வில் கல்லூரி முதல்வரும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



**TITLE : Nature Inspired Solution for Real - World Problems**
RESOURCE PERSONS : **Dr. GEETHA MANIVASAGAM,** Professor & Director, CBCMT, VIT, Vellore
**Dr. JOSEPH NATHANAEL,** Associate Professor, CBCMT, VIT Vellore
PARTICIPANT : **UG II & III Year - 200 Students**

## GRT Mahalakshmi Educational Endowment Covid - 19 கல்வி உதவித்தொகை வழங்குதல்





GRT கல்வி நிறுவனம் கொரானா காலத்தில் தாயை / தந்தையை இழந்த பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கியது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையிலும் ஏற்கெனவே தாயை / தந்தையை இழந்து உயர்கல்வி பயிலும் மாணவர்க்கும் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கியது. 12.05.2022 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள இராஜாஜி அரங்கத்தில் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. விஐடி வேந்தரும், அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். திருத்தணி GRT கல்வி நிறுவனத்தின் புல முதன்மையர் டாக்டர். கே.எஸ். மீனாட்சிசுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்க்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் திருத்தணி GRT பொறியியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர். எஸ். ஆறுமுகம் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் நிதிக்குழுத் தலைவர் திரு. எம். வெங்கடசுப்பு அவர்கள் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் 41 மாணவ, மாணவியர்க்கு (5 இலட்சத்து 15 ஆயிரத்து 200 ரூபாய்) GRT கல்வி நிறுவனம் சார்பாகக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

---

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

ர. சரிதா



நான் அரக்கோணம், கீழ்க்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா இறந்துவிட்டார், அம்மா விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். அரக்கோணம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பில் 750 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். சென்னையில் உள்ள Right College of Nursing-இல் B.Sc., Nursing சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி வருவதை அறிந்து அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையினர் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது படிப்பு முடித்து சென்னையில் உள்ள Sri Lalithambigai Medical College & Hospital-இல் Staff Nurse-ஆகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக் கனவை நனவாக்கிய அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

பா. சூர்யா



காட்பாடி அடுத்த பிரம்மபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பில் 1035 மதிப்பெண்கள் பெற்றுப் பள்ளியில் முதல்மாணவனாகத் தேர்ச்சிப் பெற்றேன். என்னுடைய அப்பா காட்பாடியில் உள்ள விஐடியில் செக்யூரிட்டியாக வேலை செய்கிறார். காட்பாடியில் உள்ள விஐடி பல்கலைக்கழகத்தில் BCA பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையினர் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைத்தந்து குடும்பச் சூழ்நிலையை நேரடியாக விசாரித்து நான் BCA படித்த 3 ஆண்டுகளுக்கும் எனக்குக் கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது படிப்பு முடித்து தமிழ்நாடு காவல்துறைப் பணியில் சேர்ந்துள்ளேன். என் உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்றி.

---

கு. அஷ்வினி



நான் காட்பாடி, திருமணி கிராமத்தில் வசிக்கிறேன். என் தந்தை இறந்துவிட்டார். என்னுடைய அம்மா விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். காட்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பு முடித்து, வேலூரில் உள்ள DKM மகளிர் கல்லூரியில் B.Com பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைத்தந்து குடும்பச் சூழ்நிலையை நேரடியாக விசாரித்து உதவித்தொகை வழங்கினார்கள். படிப்பு முடித்து இப்பொழுது வேலூரில் உள்ள Darling Residency-இல் Accounts பிரிவில் வேலை செய்கிறேன். என் உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## GRT Mahalakshmi Educational Endowment Covid - 19 கல்வி உதவித்தொகை வழங்குதல்



GRT கல்வி நிறுவனம் கொரானா காலத்தில் தாயை / தந்தையை இழந்த பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கியது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையிலும் ஏற்கெனவே தாயை / தந்தையை இழந்து உயர்கல்வி பயிலும் மாணவர்க்கும் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கியது. 12.05.2022 அன்று வேலூர் விஐடி வளாகத்தில் உள்ள இராஜாஜி அரங்கத்தில் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. விஐடி வேந்தரும், அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். திருத்தணி GRT கல்வி நிறுவனத்தின் புல முதன்மையர் டாக்டர். கே.எஸ். மீனாட்சிசுந்தரம் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்க்குக் கல்வி உதவித்தொகை வழங்கிச் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் திருத்தணி GRT பொறியியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர். எஸ். ஆறுமுகம் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் நிதிக்குழுத் தலைவர் திரு. எம். வெங்கடசுப்பு அவர்கள் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் 41 மாணவ, மாணவியர்க்கு (5 இலட்சத்து 15 ஆயிரத்து 200 ரூபாய்) GRT கல்வி நிறுவனம் சார்பாகக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.



---

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

ர. சரிதா



நான் அரக்கோணம், கீழ்க்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா இறந்துவிட்டார், அம்மா விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். அரக்கோணம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பில் 750 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். சென்னையில் உள்ள Right College of Nursing-இல் B.Sc., Nursing சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி வருவதை அறிந்து அறக்கட்டளையின் உயர்கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையினர் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது படிப்பு முடித்து சென்னையில் உள்ள Sri Lalithambigai Medical College & Hospital-இல் Staff Nurse-ஆகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக் கனவை நனவாக்கிய அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

பா. சூர்யா



காட்பாடி அடுத்த பிரம்மபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பில் 1035 மதிப்பெண்கள் பெற்றுப் பள்ளியில் முதல்மாணவனாகத் தேர்ச்சிப் பெற்றேன். என்னுடைய அப்பா காட்பாடியில் உள்ள விஐடியில் செக்யூரிட்டியாக வேலை செய்கிறார். காட்பாடியில் உள்ள விஐடி பல்கலைக்கழகத்தில் BCA பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையினர் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைத்தந்து குடும்பச் சூழ்நிலையை நேரடியாக விசாரித்து நான் BCA படித்த 3 ஆண்டுகளுக்கும் எனக்குக் கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது படிப்பு முடித்து தமிழ்நாடு காவல்துறைப் பணியில் சேர்ந்துள்ளேன். என் உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்றி.

---

கு. அஷ்வினி



நான் காட்பாடி, திருமணி கிராமத்தில் வசிக்கிறேன். என் தந்தை இறந்துவிட்டார். என்னுடைய அம்மா விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். காட்பாடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பு முடித்து, வேலூரில் உள்ள DKM மகளிர் கல்லூரியில் B.Com பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைத்தந்து குடும்பச் சூழ்நிலையை நேரடியாக விசாரித்து உதவித்தொகை வழங்கினார்கள். படிப்பு முடித்து இப்பொழுது வேலூரில் உள்ள Darling Residency-இல் Accounts பிரிவில் வேலை செய்கிறேன். என் உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோ. பூபதி



என்னுடைய அப்பா இறந்துவிட்டார், அம்மா தினக்கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தார். காட்பாடி அடுத்த பிரம்மபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பில் 774 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். நான் வேலூரில் உள்ள ஊரீசு கல்லூரியில் B.Sc., Computer Science பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி பயில உதவித்தொகை பெற்று படிப்பு முடித்தேன். நான் படித்த 3 ஆண்டுகளுக்கும் உதவித்தொகை வழங்கினார்கள். என்னுடைய குடும்பத்தில் நான் முதல்தலைமுறைப் பட்டதாரி. படிப்பு முடித்து இப்பொழுது காட்பாடியில் உள்ள விஐடி பல்கலைக்கழகத்தில் Physical Education Department-இல் Gym Instructor-ஆகப் பணிபுரிகிறேன். என்னுடைய உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி உதவி செய்த அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைக்கு என்னுடைய குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




## கல்வி உதவித்தொகை பெற்றவர் - 6,824

### Gender (2012 - 2022)





Total = 6,824

### First Generation Graduates (2012 - 2022)





Total = 6,824

### Course (2012 - 2022)




Total = 6,824

### School wise Beneficiaries Breakup (2012 - 2022)




Total = 6,824

இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

**முகவரி**

திட்ட ஒருங்கிணைப்பாளர்,
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014. தமிழ்நாடு.
தொலைபேசி : 0416 - 224 7777, 220 2196

**வங்கி விவரம்**

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFSC Code : IDIB000V086

**இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**